# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

**අංක 2505/17 - 2026 සැප්තැම්බර් මස 07 වැනි සඳුදා - 2026.09.07**

2505/17 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 07 ஆந் திகதி திங்கட்கிழமை

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV(ஆ) - உள்ளூராட்சி

### உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ(1)(ஆ) ஆம் பிரிவின் கீழ் கொட்டிகாவத்த முல்லேரியாவ பிரதேச சபை உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

கொட்டிகாவத்த முல்லேரியாவ பிரதேச சபைக்கு தெரிந்தெடுத்து அனுப்பப்பட்ட உறுப்பினர் ஒருவரின் பதவி கட்சி உறுப்புரிமையை முடிவுறுத்தியமை காரணமாக வெற்றிடமாயிருக்கின்றதாதலாலும்;

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ(1)(ஆ) ஆம் பிரிவின் கீழ், கொட்டிகாவத்த முல்லேரியாவ பிரதேச சபைக்கு தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட திரு. அப்துல் ரஹீம் மொஹமட் முதாசீர் என்பவர் அங்கம் வகிக்கின்ற ஐக்கிய சமாதான கூட்டமைப்பு என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராக தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான கொட்டிகாவத்த முல்லேரியாவ பிரதேச சபைக்கு தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும்;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரினால் அவ் வெற்றிடத்தை நிரப்புவதற்காக திரு. மொஹமட் பைசர் மொஹமட் ரில்வான் என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும்;

கொட்டிகாவத்த முல்லேரியாவ பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் பாக்கியராஜா ரகுநாதன் ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயமான) 66அ(1)(ஆ) என்னும் பிரிவின் நியதிகளின் படி செயற்பட்டு திரு. மொஹமட் பைசர் மொஹமட் ரில்வான் என்பவர் கொட்டிகாவத்த முல்லேரியாவ பிரதேச சபைக்கு தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

**பீ. ரகுநாதன்,**
தெரிவத்தாட்சி அலுவலர்,
கொட்டிகாவத்த முல்லேரியாவ பிரதேச சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
கொழும்பு.
2026, செத்தெம்பர் 07.

EOG 09 - 0185


1A - PG 7964 — 04 (2026/09) *இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*